மாலை முரசு

பக்கங்கள் 17+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 06 செவ்வாய்க்கிழமை 22.07.2024 | அதிர்வு 353

## பிரதம நீதியரசர் பதவிக்கு சூரசேனவின் பெயர் பரிந்துரை



இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதி யரசர் பிரீதி பத்மன் சூரசேனவின் பெயரை ஜனாதிபதி அநுரகுமார திஸா 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தேசபந்து தென்னக்கோன் குற்றவாளி என அறிவிப்பு

## விசாரணைக் குழுவின் அறிக்கை சபாநாயகரிடம் கையளிப்பு

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களில் அவர் குற்றவாளி என விசாரணைக் குழு அறிவித்துள்ளது என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இன்று அறிவித்தார்.

தேசபந்து தென்னக்கோனைப் பதவியில் இருந்து நீக்குவதற்காக முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த குழுவின் அறிக்கை தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார். 02▶



## வந்தாறுமூலையில் குரங்கு கடித்ததில் 6 பெண்கள் காயம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வந்தாறுமூலை பிரதேச குடிமனைப் பகுதிக்குள் உள்நுழைந்த குரங்குக் கூட்டம் 02▶

## தலைமன்னார் கடற்பரப்பில் கைதான 4 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில்



(எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த நிலையில் கைது செய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார். 02▶



### அறுகம்பே சபாத் இல்லத்தை அகற்றக்கோரி

# அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

**(பாறுக் ஷிஹான்)**

பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இஸ்ரேல் நாட்டவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் சபாத் இல்லத்தை உடனடியாக மூட அரசு நடவடிக்கை எடுக்குமாறு கோரி அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து ஏற்பாடு செய்த கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (21) பிரதேச சபை முன்றலில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முதலாவது கன்னி அமர்வு நேற்று தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்றபோது, இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டதுடன் கண்டன தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

அத்தோடு, உதவித் தவிசாளர் கொண்டு வந்த பலஸ்தீன மக்களுக்கு ஆதரவான பிரேரணை மீது, உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில் உரையாற்றும்போது தெரிவித்த கருத்தின் அடிப்படையிலேயே கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் சபையால் முன்னெடுக்கப்பட்டது.

“அரசே அறுகம்பை சபாத் இல்லத்தை உடன் அகற்று, இலங்கை அடுத்த பலஸ்தீனா?, இஸ்ரேலின் அடுத்த கொலனியாக இலங்கையை ஆக்க இடமளிக்காதே...” போன்ற பல வாசகங்களை ஏந்தியவாறு உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இங்கு தவிசாளர் ஏ.எஸ்.எம். உவைஸ், உறுப்பினர்கள் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில், சில்வா ஆகியோரும் ஊடகங்களுக்குக் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

## தேசபந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசபந்து தென்னக்கோன் சம்பந்தப்பட்டார் எனக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவராக உயர்நீதிமன்ற நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன செயற்படுகின்றார்.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் தவிசாளர் ஓய்வு பெற்ற நீதிபதி நீல் இத்தவெல மறறும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் ஈ.டபிள்யூ.எம். லலித் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்க பரிந்துரைத்துள்ளார்.

இந்தப் பரிந்துரையை ஜனாதிபதி அரசமைப்புச் சபைக்கு வழங்கியுள்ளார்.

இந்தப் பரிந்துரையின் மீது இறுதி முடிவை எடுக்கும் வகையில் அரசமைப்புச் சபை நாளை புதன்கிழமை கூடவுள்ளது.

தற்போதைய பிரதம நீதியரசர் மூர்து பெர்னாண்டோ எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள நிலையில், அவர் எதிர்வரும் 25 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் தனது பிரியாவிடை உரையை நிகழ்த்தவுள்ளார்.

நீண்ட கால நீதித்துறை சேவையில் அனுபவம் பெற்ற பிரீதி பத்மன் சூரசேன, உயர்நீதிமன்றின் சிரேஷ்ட நீதியரசர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அவர் நீதித்துறை சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றிய அனுபவம் பெற்றவர்.

இதேவேளை, நாட்டில் பரபரப்பாகப் பேசப்பட்ட பல முக்கிய வழக்குகளில் நீதிபதியாகப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போதும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தும் நாடாளுமன்ற மூவரடங்கிய விசாரணைக் குழுவின் தலைவராகவும் அவர் அங்கம் வகிக்கின்றார்.

இந்தப் பரிந்துரை ஏற்கப்பட்டால் பிரீதி பத்மன் சூரசேன, இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவார்.

## வந்தாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் மீது கடித்ததில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

குரங்குகளின் அட்டகாசத்தால் அந்தப் பகுதியில் உள்ள வீடுகளின் கூரைகள் சேதமாகியுள்ளன. பயன்தரும் மரங்களும், பயிர்களும் அழிவடைந்துள்ளன.

மக்களும் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாது பயப் பீதியில் இருக்கின்றார்கள்.

வந்தாறுமூலை, பேக்வீதியில் நேற்று வீட்டைவிட்டு வெளியில் வந்த வயதான பெண் ஒருவர் மீது குரங்கு கடித்ததை யடுத்து அவர் படுகாயமடைந்துள்ளார். அவரின் காலில் பாரிய தசைப் பகுதி இல்லாமல் போயுள்ள நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கடந்த ஒரு வாரத்தில் 6 பேர் குரங்குகடிக்கு உள்ளாகிக் காயமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் பெண்களாவர்.

## தலைமன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று திங்கட்கிழமை இரவு கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர், இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய இழுவைப் படகு ஒன்றைக் கைப்பற்றினர். அந்தப் படகில் இருந்த 4 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

பின்னர் அந்த மீனவர்களையும், இழுவைப் படகையும் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர், இழுவைப் படகுடன் 4 இந்திய மீனவர்களையும் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் 4 இந்திய மீனவர்களையும் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தினர்.

மேற்படி மீனவர்களை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.



## கொழும்பில் கைது செய்யப்பட்ட

# முன்னாள் புலி உறுப்பினர் வழங்கிய தகவலின்படி வவுனியாவில் 86 கைக்குண்டுகளுடன் ஒருவர் கைது!

**(கி.வசந்தன்)**

கொழும்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர் வழங்கிய தகவலின்படி வவுனியா, நேரியகுளம் பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பரல் ஒன்றில் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட 86 கைக்குண்டுகளுடன் ஒருவர் வவுனியா மாவட்டக் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டார்.

நேற்று கொழும்பில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி போராளி வழங்கிய தகவலின் அடிப்படையில் கொழும்பிள் இருந்து வருகை தந்த புலனாய்வுத்துறை அதிகாரிகளோடு வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸாரும் இணைந்து செட்டிகுளம் – துட்டுவாகை மற்றும் நேரியகுளம் பகுதிகளில் உள்ள இரு வீடுகளில் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, நேரியகுளத்தில் வீடு ஒன்றின் அருகாமையில் பிளாஸ்டிக் பரல் ஒன்றினுள் 86 கைக்குண்டுகள், ரி – 56 ரக துப்பாக்கிக்கான ரவைகள், கைத்துப்பாக்கிக்கான மூன்று ரவைகள், 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன நிலத்தின் கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

இதனை அடிப்படையாகக் கொண்டு அந்த வீட்டின் உரிமையாளரான 22 வயது இளைஞர் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.




















# சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிரான செயற்பாடுகளை ஒருபோதும் நிறுத்தாதீர்!

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் உள்ளூராட்சிமன்றங்களை முன்னெடுக்க வேண்டும். அதை ஒருபோதும் யாருக்காகவும் நிறுத்தவேண்டாம்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடனான மாதாந்தக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (22) நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

சில உள்ளூராட்சிமன்றங்களின் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மக்களுக்கான அமைப்பே உள்ளூராட்சிமன்றம் என்பதை நினைவிலிருத்திச் செயற்படவேண்டும். சோலைவரி மாற்றம், கட்டட அனுமதி உள்ளிட்ட விடயங்களை எவ்வளவு விரைவாக செய்து கொடுக்க முடியுமோ அதைச் செய்து கொடுக்க வேண்டும். – என்றார்.

இதன் பின்னர் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதனால், வீதிப்பாதுகாப்பும் கழிவு முகாமைத்துவமும் தொடர்பான விளக்கமளிப்பு இடம்பெற்றது. உள்ளூராட்சி மன்றங்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் அவர் சுட்டிக்காட்டினார்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பான விடயத்தில் குப்பைகளைத் தரம் பிரித்துப் பொது மக்கள் வழங்குவதில் பின்னடிக்கும்போக்குஅவதானிக்கப்பட்டுள்ளது என்று உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் குறிப்பிட்டனர்.

இதன்போது, கண்டி மாவட்டத்தில் உணவு பொதி செய்வதற்கு அல்லது உணவை உண்பதற்கு பயன்படுத்தப்படும் 'லஞ்ச் சீற்றை' துப்புரவு செய்து கொடுத்தாலேயே உள்ளூராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ளும் நிலைமை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், இங்கு இவ்வாறான இறுக்கமான நடைமுறைகளை சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் தீர்மானங்களை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.

வீதிகளில் குப்பைகளைப் போடுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களால், எந்தெந்த வீதிகளில் எந்த நேரத்தில் சுற்றுச்சூழல் பொலிஸாரின் சுற்றுக்காவல் நடவடிக்கை தேவை என்ற விவரங்களை வழங்குமாறும் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதாக சுற்றுச்சூழல் பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாழ். மாநகர சபையில், குடியிருப்பாளர்களுக்கு அட்டை வழங்கி முன்னெடுக்கப்பட்டுவரும் கழிவகற்றல் பொறிமுறையை ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் முன்னெடுக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

மேலும், மின்கம்பங்களில் ஏறி மின்விளக்குகள் பொருத்துதல் மற்றும் திருத்துதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்பட்ட 38 பணியாளர்களின் பெயர்ப் பட்டியல் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் விரைவில் அவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தெரிவித்தார்.

தொடர்ந்து ஏனையோருக்கு அடுத்த கட்டமாகப் பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் வழங்கும் செயற்பாடுஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இங்கு தெரிவித்தார். இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர் அனைத் ணதுச் சபைகளதும் தவிசாளர்கள், மேயர் உள்ளிட்டோரைச் சந்திக்கவுள்ளார் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ. சோதிநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாநகர சபை ஆணையாளர்கள், 5 மாவட்டங்களதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், நகர சபைச் செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், சுற்றுச்சூழல் பொலிஸார் ஆகியோர் பங்கேற்றனர்.











# மன்னார் நகருக்குள் அமைந்துள்ள குளங்களை புனரமைக்க ஆலோசனை

## யு.என்.டி.பி. நிறுவனம் ஆலோசனை

(வாஸ் கூஞ்ஞ)

யு.என்.டி.பி. நிதி அனுசரனையுடன் மன்னார் நகரில் அமைந்துள்ள இரு குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றை நேரில் பார்வையிடுவதற்காக யு.என்.டி.பி. தலைமையகத்தில் இருந்து கலாநிதி சுரேக்கா பெரெரா மற்றும் ஜெயவதனி ஆகியோர் கடந்த வார இறுதியில் மன்னாருக்கு வந்திருந்தனர்.

இவர்கள் புனரமைக்கப்பட்டு வரும் பால்குளம் மற்றும் கமகுளம் ஆகியவற்றையே நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்த குளங்களில் மேலதிகமாக என்ன அபிவிருத்தி செய்யலாம் என்று அங்குள்ள கிராமிய மட்ட மக்கள் மாதர் அபிவிருத்தி சங்கம், முஸ்லீம் அமைப்புக்கள் மற்றும் பிரதிகளிடம் கேட்டறிந்தனர்.

மன்னார் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலக அதிகாரி றொகன் குரூஸ் தலைமையில் ஒரு ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது.

இதில் 45 திணைக்களங்களின் அதிகாரிகள் , கிராமிய மட்டத்திலான ஆண், பெண் அமைப்பக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தீர்மானமாக பால்குளத்தையும் கமகுளத்தையும் சுற்றிவர அணைக்கட்டுஅடிப்பதும் எனவும் அத்துடன் சுற்றிவர மரங்கள் வளர்க்க வேண்டிய அவசியம் மற்றும் இவற்றை துப்பரவாக வைத்திருக்க வேண்டிய அவசியமும் இதற்கு மன்னார் நகர சபை பாதுகாப்பு தொடர்பான விளம்பர பலகை போட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

கமம்குளத்திலிருந்து வெள்ள நீர் கடலுக்கு போவதற்காக அமைக்கப்பட்ட கால்வாய்க்கு ஊடாக கடல் நீர் வரும் அபாயமும் காணப்படுவதால் அதில் அமைக்கப்பட்டுள்ள கதவை புனரமைக்க வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்பட்டது.






# பளை மத்திய கல்லூரியில் நட்பு ரீதியான சாரண பாசறை

பளை மத்திய கல்லூரியில் நட்பு ரீதியான சாரண பாசறை நிகழ்வுகள் கடந்த மூன்று தினங்கள் நடைபெற்று இறுதி நிகழ்வு பளை மத்திய கல்லூரி வளாகத்தில் நடைபெற்றன.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, பளை மத்திய கல்லூரி, வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட சாரணர்கள் பங்கு பற்றினர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக, நிகழ்வுக்கு நிதி அனுசரணையை வழங்கிய நடராஜா காந்தரூபனும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேசபந்துவின் திரிசங்கு நிலை!

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீதான விசாரணை குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இன்று காலை சபையில் அறிவித்தார்.

அதன்படி, தேசபந்து தென்னக்கோனை விசாரித்த குழு, அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என்று கண்டறிந்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். இந்த விசாரணை முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் வாய்ப்பு தேசபந்து தென்னக்கோனுக்கு இல்லை.

இந்தத் தீர்ப்பு அறிக்கை மீதான விவாதம் விரைவில் இடம்பெறுமென்றும் அதுபற்றிய விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படுமென்றும் சபாநாயகர் தெரிவித்திருக்கின்றார்.

இந்த விசாரணைக் குழு உயர் நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேன தலைமையில் நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி.இத்தவால மற்றும் தேசிய பொலிஸ் ஆணையத்தின் தலைவர் ஈ.டபிள்யூ.எம்.லலித் ஏகநாயக்க ஆகியோரைக் கொண்டிருந்தது.

2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க - 'அதிகாரிகளை நீக்குதல் நடைமுறை சட்டத்தின்' பிரிவு 5 இன் கீழ், தேசபந்து தென்னக்கோனை, பொலிஸ் மா அதிபர்பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவை நியமிப்பதற்கான தீர்மானம் கடந்த ஏப்ரல் 04 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் மா அதிபர் அல்லது சட்டமா அதிபர் பதவியில் இருக்கின்ற ஒருவர் குற்றம் இழைத்தால் அவருக்கு எதிராக நாடாளுமன்றமே நேரடியாக நடவடிக்கை எடுத்து அவரை பதவியிலிருந்து விலக்குவதற்கான சட்டம் இது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து இந்த 23 ஆண்டுகளில் முதல் தடவையாக இவ்வாறு பதவி இழக்கும் ஆபத்தை எதிர்கொள்ளும் முதல் நபர் தேசபந்து தென்னக்கோன்தான்.

இப்போது விசாரணை நடத்திய குழுவின் முடிவை நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் தேசபந்து தென்னக்கோனைப் பதவியில் இருந்து விலக்குவது தொடர்பான பிரேரணையை சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றுவதன் மூலம் சேவையிலிருந்தும் - பதவியிலிருந்தும் - தேசபந்து தென்னக்கோனை வெளியேற்ற முடியும். அதுதான் பெரும்பாலும் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபராக நியமித்த விடயம் - முறைமை - தொடர்பான சிக்கல் உயர் நீதிமன்றத்தில் விசாரணையை எதிர்நோக்கி இருக்கின்றது.

அப்போதைய அரசமைப்புக் கவுன்ஸிலின் முடிவை அச்சமயம் சபாநாயகராக இருந்த மஹிந்த யாப்பா அபேவர்தன தவறான முறையில் வியாக்கியானம் செய்து, அர்த்தப்படுத்தி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தார் என்றும், அதன் அடிப்படையிலேயே தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டார் என்றும் தெரிவித்து, அந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கின் விசாரணை நடைபெற்று வரும் நிலையில் அதன் தீர்ப்பும் விரைவில் வெளியாகக் கூடிய வாய்ப்புகள் உண்டு. அந்தத் தீர்ப்பில் முன்னைய சபாநாயகர் கடுமையாக நீதிமன்றக் கண்டனத்தை அல்லது தண்டனையை எதிர்கொள்ளவும் வாய்ப்பு உண்டு என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அப்படி தவறான முறையில் பொலிஸ்மா அதிபர் நியமனத்தை தேசபந்து தென்னக்கோன் பெற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால் இப்படி பொலிஸ் சேவையிலிருந்தே அடியோடு வெளியேற்றப்படும் அவலம் அவருக்கு நேராமல் இருந்திருக்குமோ... என்னவோ..!



# மட்டுவில் வடக்குக் கண்ணகை முன்பள்ளிச் சிறாருக்குச் சத்துணவு

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு கண்ணகை முன்பள்ளி சிறார்களுக்குச் சத்துணவு வழங்கும் நிகழ்வு நேற்று (21) முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

சத்துணவு வழங்குவதற்கு திரு. திருமதி நகுலேஸ்வரன் சுகந்தினி 50 ஆயிரம் ரூபா வழங்கியிருந்தனர்.

சமுர்த்தி திணைக்களத்தின் மூன்று தசாப்த கால நிறைவை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினரால் சத்துணவு வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# 'ரைட் டு லைவ்' நிறுவனத்தின் விசேட கலந்துரையாடல் மன்னாரில்






**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

'ரைட் டு லைவ்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சுயதொழில் முனைவோர் மற்றும் ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகளுக்கான சிறப்பு கலந்துரையாடல் வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வு எதிர்வரும் காலங்களில் மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் ஊடாக செய்யவிருக்கும் செயற்பாடுகள் மற்றும் சுய முயற்சியாளர்களை ஊக்குவித்தல், ஊடகவியலாளர்களுடன் இணைந்து சமூக செயற்பாட்டாளர்களை இணைத்து செயல்பாடுகளை செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்து ஆலோசிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் ஊடாக இணைந்து செயல்படும் சட்டத்தரணிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் காலங்களில் அனைவரையும் இணைத்துக் கொண்டு சுய தொழில் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான பல விடயங்களை மேற்கொள்வதற்கான ஒரு ஆயத்த ஆலோசனை நிகழ்வாக இது இடம் பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் 'ரைட்டு லைவ்' நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி பிலிப் திஸ்ஸாநாயக்க, சட்டத்தரணி துலான், திட்ட இணைப்பாளர்கள் துனித் மற்றும் பிரசாந்தன், மன்னார் மாவட்ட முதலுதவி மையத்தின் இணைப்பாளர் டிலக்சன் மற்றும் மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் பிரதான பங்காளர்களான சுய தொழில் முயற்சியாளர்கள், ஊடகவியலாளர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

# பனைவாரம் இன்று முதல் அனுஷ்டிப்பு!

வடக்கு மாகாண கூட்டுறவு அபி விருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் ஆண்டுதோறும் ஜூலை மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரையான காலப் பகுதி பனை வார மாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இம்முறையும் பனை வளம் பெருகும் வகையிலும் பனை சார் உற்பத்திப் பொருள்களின் பலாபலன்களை வெளிப்படுத்தும் வகையிலும் அந்தப் பொருள்களுக்கு உறுதியான சந்தைப் படுத்தலை ஏற்படுத்தி கொடுக்கும் வகையிலும் பனம் விதைகள் நடுதல், பனை சார் உற்பத்தி பொருள்கள் காட்சிப்படுத்தலும் விற்பனையும், பனை சார் பொருள்களை உற்பத்தி செய்தல் தொடர்பான போட்டிகள், பாடசாலை மாணவர்களிடையே ஓவிய போட்டிகள், தாலம் சஞ்சிகை வெளியீடு மற்றும் கலை நிகழ்வுகள் போன்றன வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்புடன் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் இன்று (22) செவ்வாய்க்கிழமை முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம், நல்லூர், சங்கிலியன் பூங்காவில் பனை சார் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் விற்பனையும் நிகழ்வு 'எங்கள் வாழ்வியலில் பனை' என்னும் தொனிப் பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக இந்த நிகழ்வு இடம பெறவுள்ளது.

ஜூலை 27ஆம் திகதி வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திலும் ஜூலை 28ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திலும் பனம் விதைகளை நடும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# குப்பைகளைப் பொது இடங்களில் போடுபவர்களை ஆதாரத்துடன் தெரிவிப்பவர்களுக்குச் சன்மானம்!

## காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் எஸ். பாஸ்கரன்

(பாறுக் ஷிஹான்)

குப்பைகளை கண்ட கண்ட இடங்களில் கொட்டுபவர்களுக்கு எதிராக தண்டப்பணம் அறவிடுவதற்கும், அதே போன்று குப்பைகளை பொது இடங்களில் கொட்டுபவர்களைச் சரியான ஆதாரத்துடன் எங்களிடம் தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் வழங்குவதற்கும் தீர்மானக்கப்பட்டுள்ளது.

எனவே பிரதேச மக்கள் எங்களுடன் ஒத்துழைப்பு வழங்கி செயல்பட வேண்டும் என்று காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் எஸ். பாஸ்கரன் தெரிவித்தார்.




காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் திண்மக் கழிவகற்றல் பணியை மிகச் சிறப்பாக செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன் அடிப்படையில் சனிக்கிழமை காரைதீவு – 03 லெனின் வீதி பிரதேசத்தில் சட்டவிரோதமாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்றும் பணியில் காரைதீவு பிரதேச சபை ஊழியர்கள் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது இங்கு கருத்து தெரிவித்த பிரதேச சபையின் தவிசாளர் பாஸ்கரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் உள்ள மக்கள் சட்ட விரோதமாகத் திண்மக் கழிவுகளை வீதிகளில் கொட்டுகின்ற இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இது எதிர்காலத்தில் எமது பிரதேசத்தில் சுகாதார சீர்கேடுகளை, சூழல் பாதிப்புகள் ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும்.

எனவே,சுத்தமான, சுகாதாரமான சூழலையும் அழகான காரைதீவு பிரதேசத்தையும் உருவாக்குவதற்காக எங்களாலான முயற்சிகளைச் செய்து வருகிறோம். எங்களுக்குப் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இது போன்று எதிர்காலத்திலே வருகின்ற ஒவ்வொரு சனிக்கிழமையும் எமது பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் திண்மக்கழிவகற்றல் விடயத்தை மிகச் சிறப்பாகச் செய்வதற்கு நாங்கள்முயற்சிகள்செய்து வருகின்றோம்.

அதற்கான ஒத்துழைப்பைப் பொது மக்கள் எங்களுக்குத் தர வேண்டும். எமது பிரதேச சபையின் ஊழியர்கள் என்னோடு இணைந்து மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.– என்றார்



# பச்சிலைப்பள்ளி கிராம சக்தி மக்கள் சங்க கலந்துரையாடல்





பச்சிலைப்பள்ளி பிரதேச கிராமசக்தி மக்கள் சங்கங்களின் கடன் வழங்கல் செயற்பாடு, கூட்டுறவு அரவணைப்புக் கடன் மற்றும் மீள் எழுச்சித் திட்ட நுண்நிதி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (21) செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் உதவிப் பிரதேச செயலாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர் பலநோக்கு கூட்டுறவுச்சங்க முகாமையாளர், கிராமிய வங்கி முகாமையாளர், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமசக்தி மக்கள் சங்கங்களின் தலைவர், பொருளாளர், மீள் எழுச்சித் திட்டங் களின் தலைவர், பொருளாளர், பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# பனிப்புலம் இலவசக் கல்விக் கூட வருடாந்த பரிசளிப்பு விழா

(எஸ். நிதர்ஷன்)

யாழ். சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பனிப்புலம் இலவசக் கல்விக் கூடத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இலவசக்கல்வி கூடத்தின் தலைவர் த.றஞ்சனின் தலைமையில் இடம்பெற்றது.

இதனபோது விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கபட்டுப் பாரம்பரிய முறைப்படி வரவேற்பளிக்கபட்டனர். தொடர்ந்து இலவசக்கல்வி கூடத்தின் கொடையாளர்கள் கௌரவிப்பும் மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கலும் இடம்பெற்றது. இலவசக் கல்வி கூட மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தொடர்ந்து மாண வர்களின் சிந்து நடைகூத்தும் இடம் பெற்றது.

இதன் பொழுது பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் ஆறுமுகம் நற்குணேஸ்வரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ், பண்மக்கள் இலவசக்கல்வி கூடத்தின் ஆசிரியர்கள், மாணவர்கள், புலம்பெயர் தேச உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சமுர்த்தி திணைக்கள மூன்று தசாப்த கால நிறைவை முன்னிட்டு மாணவருக்கு உதவி



சமுர்த்தி திணைக்களத்தின் மூன்று தசாப்த கால நிறைவை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினரால் சமுர்த்தி பயனாளிகளின் உயர்தரத்தில் கல்வி கற்கும் 139 மாண வர்களுக்குச் சிப்தொர புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு 1 பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.



நிகழ்வில் சமுர்த்தி மாவட்டப் பணிப் பாளர், பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், மாவட்ட கருத்திட்ட முகாமையாளர், தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப் பாளர், வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், மாணவர்கள், பெற் றோர்கள், சி.பி.ஓ. தலைவர்கள் போன் றோர் கலந்து கொண்டனர்.



# வெளிநாடுகளுக்குப் பனை உற்பத்திகளை ஏற்றுவதால் நாட்டுக்குப் பெரும் இலாபம்!

## பனை எழுச்சி வார ஆரம்ப நிகழ்வில் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்

பனை உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் ஊடாக எமது நாட்டுக்குப் பெரும் அந்நியச் செலவாணி கிடைக்கப்பெற்று வருகின்றது. எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி பொறிமுறையை இலகுவாக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இதன் ஊடாக இடைத்தரகர்களை விட உற்பத்தியாளர்களே அதிக இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அவர்களின் வாழ்வாதாரமும் மேம்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடத்தும், வடக்கு மாகாண பனை எழுச்சி வாரத்தை முன்னிட்டு 'எங்கள் வாழ்வியலில் பனை' என்னும் தலைப்பிலான கண்காட்சியை, நல்லூர் முத்திரைச்சந்தியிலுள்ள சங்கிலியன் பூங்காவில் வடக்கு மாகாண ஆளுநர் இன்று (22) செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் ஒவ்வொரு கண்காட்சிக் கூடங்களையும் ஆளுநர் பார்வையிட்டார்.

இங்கு பிரதம விருந்தினர் உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மில்வைட் கனகராஜா சகல இடங்களிலும் பனை விதைகளை நடுகை செய்து பனையை வளர்த்த ஒருவர். பனைகள் இல்லாத தேசம் இருக்கக் கூடாது என்பதற்காக அரும்பாடுபட்டவர். அவரின் நினைவு நாள் இந்தப் பனை வாரத்தின் ஆரம்ப நாளாக உள்ளது.

எமது மாகாணத்தின் – மாவட்டத்தின் சொத்தாகவுள்ள பனை வளத்தைப் பயன்படுத்திப் பல்வேறு பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதை நம்பியுள்ள மக்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும். அவர்களின் உற்பத்திக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும்.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றன. ஆனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தளவுக்கு இல்லை. கடந்த காலங்களில் அவர்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அதைப் பயன்படுத்தி அவர்கள் முன்னேறவில்லை. ஆனால், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அவ்வாறில்லை. இவ்வாறு சிறப்பாகச் செயற்படுவர்களுக்கு அடுத்துவரும் ஆண்டுகளில் கூடுதலான நிதி ஒதுக்கீட்டை வழங்க முடியும்.– என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனின் பிரதிநிதியாக கௌரவ மாநகரசபை உறுப்பினர் சு.கபிலன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.











# நோர்ட்டன் தெபட்டன் தமிழ் வித்திக்கு நிரந்தர அதிபர், ஆசிரியரை நியமிக்குக

## பெற்றோர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

(பொகவந்தலாவ எஸ்.சதீஷ்)

நோர்ட்டன் தெபட்டன் தமிழ் வித்தியாலயத்துக்கு நிரந்தர அதிபர் மற்றும் ஆசிரியர்களை நியமிக்கக் கோரி பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நோர்ட்டன் தெபட்டன் தமிழ் வித்தியாலயத்தில் நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்குமாறும் ஆசிரியர்களை நியமிக்குமாறும் கோரி இன்று செவ்வாய்க்கிழமை காலை அந்தப் பிரதேச பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

நோர்ட்டன் தெபட்டன் தமிழ் வித்தியாலயத்தில் 185 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். தரம் 01 தொடக்கம் தரம் 11வரை காணப்படுகிறது.

எமது பாடசாலையில் 12 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என்று ஹட்டன் வலயக் கல்வி பணிப்பாளர் கூறுகிறார். ஆனால் பெற்றோர்களாகிய நாங்கள் பாடசாலைக்கு சென்று பார்த்தால் தினமும் ஐந்து ஆசிரியர்கள் மாத்திரம் வருகை தருகின்றனர்.

நிரந்தர் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பற்றாகுறை காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் ஊடாக ஹட்டன் வலயகட கல்விப் பணிமனையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கடிதம் வழங்கியுள்ளோம். எனினும் எமது பாடசாலையின் பிரச்சினை தொடர்பாகக் ஹட்டன் வலயக் கல்விப் பணிமனை கண்டு கொள்ளவில்லை என்று பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையிலும் எமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் சிறந்த பெருபேற்றினை எடுத்துள்ளனர் எனவே எமது பாடசாலையில் காணப்படும் அதிபர் பிரச்சினை மற்றும் ஆசிரியர்கள் பிரச்சினைகளுக்கு ஹட்டன் வலையகல்வி பணிமனை தீர்வினை பெற்றுதர வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த விடயம் குறித்து ஹட்டன் வலயக் கல்விப் பணிமனையின் பணிப்பாளர் ஆர். விஜயந்திரனை தொடர்பு கொள்ள முயற்சித்த போது அது பயணிக்க வில்லை. இந்த சம்பவம் தொடர்பாக மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் நிகால் அபேகோனிடம் தொடர்பு கொண்டு வினவியபோது,

ஹட்டன் கல்வி வலையத்துக்கு உட்பட்ட சில பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அந்த வெற்றிடங்களை நிப்பும் நோக்கில் அதிபர்கள் அல்லாத பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்காக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் வெகுவிரைவில் தெபட்டன் தமிழ் வித்தியாலயத்துக்கு மாத்திரமல்ல அதிபர்கள் இல்லாத பாடசாலைகளுக்கும் அதிபர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

தெபட்டன் தமிழ் வித்தியாலயத்தில் காணப்படும் ஆசிரியர்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு இன்று ஹட்டன் வலயக் கல்விப் பணிமனையில் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று மத்திய மாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் நிகால் அபேகோன் குறிப்பிட்டார்.



# மக்களவையில் பேசுவதற்கு என்னை அனுமதிக்கவில்லை

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



மக்களவையில் பேசுவதற்கு தன்னை அனுமதிக்கவில்லை என்று ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. இதில் பஹல்காம் தாக்குதல், ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. சபாநாயகர் இதை ஏற்க மறுத்ததால் எதிர்க் கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து அவை ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து மக்களவை எதிர்க் கட்சித் தலைவரும் காங்கிரஸ் முன்னாள் தலைவருமான ராகுல் காந்தி செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“மக்களவையில் ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் பா.ஜ.க. உறுப்பினர்கள் பேச அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் இதுகுறித்து தனது கருத்தை சொல்ல முற்பட்டால் அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

மக்களவையில் பேச எனக்கு உரிமை உள்ளது. ஆனால், ஒருபோதும் நான் பேசுவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. என்னைப் பேச அனுமதித்தால் விவாதம் நடக்கும். ஆட்சியாளர்கள் ஏதாவது சொன்னால் அதுகுறித்து பேச எதிர்க்கட்சியினருக்கும் அனுமதி தர வேண்டும். ஆனால் அனுமதி தரப்படுவதில்லை. 2 வார்த்தைகள் பேச விரும்புகிறோம். ஆனால் அனுமதி மறுக்கப்படுகிறது.” என்று தெரிவித்துள்ளார்.

# மும்பை தொடர் குண்டுவெடிப்பில் தொடர்புடைய 12 பேர் விடுவிப்பு



கடந்த 2006 ஆம் ஆண்டு 189 உயிரிழக்க காரணமாக இருந்த மும்பை தொடர் குண்டுவெடிப்பில் தொடர்புடைய 12 பேரை மும்பை உயர் நீதிமன்றம் நேற்று விடுவித்தது. சிறப்பு நீதிமன்றம் விதித்த ஆயுள், மரண தண்டனை ரத்து செய்யப்பட்டது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி மும்பை புறநகரில் ஓடும் 7 ரயில்களில், 11 நிமிடங்களுக்குள் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. இதில் 189 பேர் உயிரிழந்தனர். 800 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இது தொடர்பாக மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. விசாரணையின் முடிவில், 12 பேர் குற்றவாளிகள் என விசாரணை நீதிமன்றம் கடந்த 2015 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. இவர்களில் 5 பேருக்கு மரண தண்டனையும் 7 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதையடுத்து, குற்றவாளிகள் சார்பில் மும்பை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிபதிகள் அனில் கிலோர் மற்றும் ஷ்யாம் சந்தக் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வந்தது. விசாரணை முடிந்த நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்த தீர்ப்பில் குறிப்பிடுகையில், மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் மீதான குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் நிரூபிக்க அரசுத் தரப்பு தவறிவிட்டது. இவர்கள் இந்த குற்றத்தில் ஈடுபட்டார்கள் என சந்தேகத்தின் பேரில் கூறுவதை ஏற்க முடியாது.

மேலும் விசாரணையின்போது மீட்கப்பட்ட வெடிபொருள்கள், ஆயுதங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியவற்றுக்கு குண்டுவெடிப்பு சம்பவத்துடன் தொடர்பு இருப்பது உறுதி செய்யப்படவில்லை. இந்த தாக்குதலில் என்ன வகையான குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்பதைக் கூட அரசுத் தரப்பால் நிரூபிக்க முடியவில்லை.

எனவே, இந்த வழக்கில் தொடர்புடைய 12 பேர் குற்றவாளிகள் என சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் அவர்களுக்கான தண்டனையும் ரத்து செய்யப்படுகிறது. வேறு எந்த வழக்கும் நிலுவையில் இல்லாவிட்டால் அனைவரையும் சிறையிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஹமாஸ் ஆயுதக் குழு பொய்களை பரப்புகிறது

## இஸ்ரேல் தகவல்

காசாவில் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர இங்கிலாந்து மற்றும் 27 நாடுகள் அழைப்பு விடுத் துள்ளன.

அங்கு பொதுமக்களின் துன்பம் ஆழத்தை எட்டியுள்ளது என்று அந்த நாடுகள் கூறியுள்ளன.

இஸ்ரேலின் உதவி விநியோக மாதிரி ஆபத்தானது என்றும், உணவை தேடி வரும் பொதுமக்களை மனிதாபி மானமற்ற முறையில் கொல்வதை இந்த நாடுகள் கண்டித்துள்ளன.

வார இறுதியில் உணவுக்காகக் காத்திருந்த போது 100க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய துப் பாக்கிச்சூட்டில்கொல்லப்பட்டதாகவும், மேலும் 19 பேர் ஊட்டச்சத்துக் குறை பாட்டின் விளைவாக உயிரிழந்ததா கவும் காசாவின் ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் கூறியுள்ள நிலையில் இந்த கண்டனம் வெளி யாகியுள்ளது.

இந்தநிலையில் இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம், இங்கிலாந்து உட்பட்ட 27 நாடுகளின் கண்டனத்தை நிராகரித்துள்ளது.

இது ஹமாஸுக்கு தவறான செய்தியை அனுப்புகிறது என்றும் இஸ்ரேலிய அமைச்சகம் குறிப்பிட் டுள்ளது.

மேலும் புதிய போர்நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் விடுதலை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக ஹமாஸ் ஆயுதக் குழு பொய்களைப் பரப்புவதாகவும், உதவி விநியோகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட் டுள்ளது.



# ரஷ்யாவில் விபத்து; 13 பேர் உயிரிழப்பு

ரஷ்யாவின் கிழக்கே, யகுதியா பகுதியில் நேற்றைய தினம் சுரங்க தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பசு ஒன்று, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து 82 அடி ஆழம் கொண்ட பள் ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளா னதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 20 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

டெனிசோவ்ஸ்கி சுரங்கம் மற்றும் நிலக்கரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைந்த விதியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவில் இதுபோன்ற தொழிற் சாலை சார்ந்த விபத்துகள் நடைபெறு வது அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகவும், பாதுகாப்பு குறைபாடு களால் இதுபோன்ற விபத்துகள் நடைபெறுகின்றன எனவும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த விபத்து சம்பவம் தொடர்பான தீவிர விசா ரணைகளைப் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர்.




# பங்களாதேஷ் விமான விபத்தில் பலி எண்ணிக்கை 27 ஆக உயர்வு

டாக்காவின் மைல்ஸ்டோன் கல்லூரி மற்றும் பாடசாலை வளாகத்தில் பங்களாதேஷ் விமானப்படை பயிற்சி விமானம் மோதி இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் 25 பேர் சிறுவர்கள் என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், விபத்தில் காயமடைந்த சிறுவர்கள் உட்பட 78 பேர் டாக்காவின் பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் ஐந்து பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று தேசிய தீக்காயங்கள் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிறுவனத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தலைமை சுகாதார ஆலோசகரின் சிறப்பு உதவியாளர் பேராசிரியர் எம். டி. சயதுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இதுவரை உயிரிழந்தவர்களின் 20 உடல்கள் அந்தந்த குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேநேரம், நேற்று உறவினர்கள் மற்றும் பிரதேசவாசிகளின் கூட்டம் அதிகமாக இருந்ததால், பாதுகாப்பை பலப்படுத்த தேசிய தீக்காயங்கள் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிறுவன வளாகத்தில் இன்று முதல் இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளதாக மருத்துவமனை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

தலைநகரில் உள்ள குர்மிடோலாவில் உள்ள விமானப்படை தளத்திலிருந்து வழக்கமான பயிற்சிப் பணிக்காக நேற்று பிற்பகல் 1:06 மணிக்கு (0706 GMT) புறப்பட்ட சிறிது நேரத்திலேயே F-7 BGI விமானம் விபத்துக்குள்ளானது.

விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.


இந்த சம்பவத்தின் பின்னணியில் அரசாங்கம் ஒரு நாள் துக்க தினத்தை அறிவித்தது, கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன, அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் சிறப்பு பிரார்த்தனைகள் செய்யப்பட்டன.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை | 22/07/2025

## வாகன விபத்தில் பெண் உயிரிழப்பு

கனடாவில் 56 வயதான ஒரு பெண் ஒருவர் திங்கள் கிழமை காலை மார்க்ஹாம் பகுதியில் வாகனம் மோதியதில் கடுமையாக காயமடைந்து பின்னர்

02




# டொராண்டோவில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய 11 பேர் கைது

**டோராண்டோவில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**டொராண்டோ நகரின் முக்கிய வீதியில் நடைபெற்ற போராட்டம் ஒன்றை கலைக்க முயன்ற பொலிஸாரை சில போராட்டக்காரர்கள் தாக்கியுள்ளனர்.**

**இவ்வாறு தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

சபாடினா Spadina Avenue மற்றும் ப்ரொன்ட் வீதி Front Street West சந்தியில் நடைபெற்ற போராட்டத்திற்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

போராட்டக்காரர்களிடம், சாலையை விட்டுவிட்டு வெளியேறுமாறு பொலிஸார் உத்தரவு வழங்கினர்.

அந்த உத்தரவை போராட்டக்காரர்கள் நிராகரித்து, அந்த சந்தியை முற்றுகையிட்டதால்தான் பொலிஸார் இந்த போராட்டத்தை சட்டவிரோத ஒன்றுகூடலாக அறிவித்துள்ளனர்.

போராட்டக்காரர்கள் இரண்டாவது முறையாக கலைக்க உத்தரவிடப்பட்ட போது, சிலர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி, பொலிஸாரை தாக்கினர். அத்துடன், சட்டம் மற்றும் ஒழுங்கை மீட்டமைக்க முயன்ற பொலிஸாரின் நடவடிக்கைகளை எதிர்த்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல்களில் பொலிஸார் காயமடைந்தனரா என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.





# கனேடிய தமிழர் பேரவை ஊடக சந்திப்பில் புலம்பெயர் தமிழர்களிடையே அமளிதுமளி

கனேடிய தமிழர் பேரவை ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் புலம் பெயர் தமிழர்களிடையே வாக்குவா தம் ஏற்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான தமிழர் தெரு விழா கனடாவில் இடம்பெற வுள்ளது.

கனடாவில் ஒவ்வொரு வருடமும் மிகச்சிறப்பாக நடந்து வரும் தமிழர் தெருவிழா இந்த ஆண்டு 11 ஆவது ஆண்டு நிகழ்வாக எதிர்வரும் ஓகஸ்ட் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இவ்விழா தொடர்பிலான ஊடக சந்திப்பின் போதே கனேடிய தமிழர் பேரவை உறுப்பினர்களிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான காணொளி தற்போது பல்வேறு தரப் பினரால் பகிரப்பட்டு வருவதுடன் கடும் விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

குறித்த காணொளியில் ஊடக சந்திப்பின்போது, ஒரு உறுப்பினருக்கு ஒரு மணிநேரம் மாத்திரமே வழங் கப்பட்டமை குறித்து இந்த குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.



## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார்.

யார்க் பிராந்திய பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

விபத்து Markham Road மற்றும் Steeles Avenue East சந்திப்புக்கு அருகில் காலை 8 மணியளவில் ஏற்பட்டது. பாதசாரியாக நடந்துவந்த அந்த பெண், வாகனம் மோதி கடும் காயங்களுடன் உடனடி யாக ஒரு அவசர சிகிச்சை மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தையடுத்து, சம்பவ இடத்திலுள்ள வீதிகள் முழு நாளும் மூடப்படும் என பொலிஸார் அறிவித்த னர். விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.



# 9 வயது மகள் கொலை; தந்தை மீது குற்றச்சாட்டு

9 வயது சிறுமியான மெலினா ஃப்ராட்டோலின் சடலமாக கண்டெடுக் கப்பட்டதையடுத்து, அவரது தந்தை யான லுசியானோ ஃப்ராட்டோலின் (வயது 45) மீது கொலை மற்றும் மனித உடலை மறைத்து வைத்தல் குற்றச்சாட்டுகளின் கீழ் அமெரிக்கா நியூயோர்க் மாநிலத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவலை நியூயோர்க் மாநில பொலிஸ் திங்கள் கிழமை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியது.

ஜூலை 20, ஞாயிற்றுக்கிழமை காலை 10.50 மணி அளவில், வர் மாண்ட் எல்லைக்கு அருகே உள்ள டைகனடரோக்கா பகுதியிலுள்ள ஒரு தனிமையான குளத்தில், மெலி னாவின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

ஜூலை 11ஆம் திகதி, தந்தை-மகள் இருவரும் விடுமுறை போக்கு வரத்திற்காக அமெரிக்காவுக்குள் சட்டப்படி வந்திருந்தனர்.



ஜூலை 20ஆம் திகதியான சனிக் கிழமையன்று, லேக் ஜார்ஜ் பகுதியில் தந்தை லுசியானோ 911 எண் மூலம் தனது மகள் காணாமல் போனார் என முறைப்பாடு செய்தார்.

மெலினா தனது தாயுடன் இரவு 6.30 மணிக்கு பேசியிருந்தார். அவர் கனடாவிற்கு திரும்புகிறேன் எனக் கூறினார். ஆனால் அதன் பின்னர், அவரது தந்தை செய்த 911 அழைப் பிற்கு இடையில், குற்றம் இடம் பெற்றதாக நாங்கள் நம்புகிறோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தந்தை கூறியதுபோல, ஒரு வெள்ளை வான் வந்ததுடன் மர்ம மான இரு ஆண்கள் குழந்தையை கடத்தி சென்றனர் என்ற கூறப்பட்ட தகவல்களை பொலிஸார் முழு மையாக விசாரித்து தவறானது என நிரூபித்துள்ளனர்.

மெலினாவின் தாயாரே அவரது முழு பாதுகாப்புக் காவலாளராக 2019 ஆம் ஆண்டு முதல் இருந்தார். தந்தை மகளுடன் விடுமுறை செல்ல அனுமதி பெற்றிருந்தார்.

தந்தை மீது இதற்கு முந்தைய எந்தக் குற்றப் பதிவு அல்லது மனநல சிக்கலும் இல்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லுசியானோ ஃப்ராட்டோலின் மீது இரண்டாம் நிலை கொலை மற்றும் உடலை மறைத்தல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.




# கல்கரியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் கல்கரியில் திங்கள் கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் மேலும் மூவர் தீவிர காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கல்கரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து நடந்த நேரத்தில், பாதை மறுபுறத்தில் இருந்த ஒரு பாதசாரி, வாகனமொன்றால் மோதி சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் அதிகாலை வேளையில் வாகனங்கள் அதிக வேகமாக செலுத்தப்படுவதாகவும், வாகன ஓட்டப் பந்தயங்கள் நடத்தப்படுவதாகவும் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.